69

R. No. M. 2445.

உ

சிவமயம்.

# "வீரசைவம்."

திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| மலர் உ | பிரமோதூத—சித்திரை 1930—ஏப்ரல் | இதழ் ச |

க. கடவுள் வணக்கம்.
உ. திருமுருகாற்றுப்படை
ங. சிவயோகம்
ச. வீரசைவ மதத்தின் காலம்
ரு. பசவேச விஜயம்
சு. அல்லமதேவர் வந்தருள்புரிதல்
எ. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்
அ. ஒரு வேண்டுகோள்

பத்திராசிரியர்:

வீ. குமாரவீரையர்,

வீரசைவ நிலயம், முசிரி (திருச்சி ஜில்லா).

துறையூர்:

நித்தியானந்த அச்சுக்கூடம்.

1930

4 - JUL 1930

# வாழ்த்துப்பா.

திருவாளர், நா. சி. கைலாயதேசிகர். வண்ணூர் பண்ணைமேற்கு.

### இ-ம். கேதார கௌளம்.

1. சிவனடியா ராய்வாழுஞ் செல்வமாம் பிறவிபெற்ற
தவமதை மறந்துவீர சைவர்தம் நிலைகுலைந்த
தவமென வறிந்தேயிந்த அவனியில் வீரசைவன்
பவவிரு ளகற்றுந்திவ்விய பருதிபோ லுதயஞ்செய்தான்.

### இ-ம். நாராயண கௌளம்.

2. திருவுளந் தனிலேயென்றுஞ் சிவனடி பரவாநின்ற
பெருவளங் கொண்டவீர சைவர்மா சங்கமீண்டு
தருமொரு வெளியீடாகுஞ் சற்போதன் வீரசைவ
குருகிரி விளக்காயென்றுங் குவலயந் தன்னில்வாழி.

### இ-ம். வசந்தா.

3. வேதங்க ளாகமங்கள் விரித்துரைத் தொளிருஞ்சைவம்
தீதங்க னின்றெஞ்ஞான்றுஞ் சிவலிங்க பூசைசெய்தே
பாதங்கள் பணிவோர்க்கந்த பரகதியளிக்குஞ் சைவ
மாமிந்த வீரசைவ மலர்விரி யிதழ்கள்வாழி.

### இ-ம். பரசு.

4. திருநீறுங் கண்டிகையுஞ் சிவலிங்க தாரணமுந்
திருமேனி தனிற்றிகழச் சிவனடியே மறவாமல்
திருநாம மஞ்செழுத்துஞ் செபித்திடுமிவ் வீரசைவர்
திருநாவிற் கலைமகளுந் திருநடம் புரிகவென்றும்.

---

உ

சிவமயம்.

# "வீரசைவம்."

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.


| மலர் உ. | பிரமோதூத—சித்திரை. 1930—ஏப்பிரல். | இதழ் ச. |
|---|---|---|


(கடவுள் வணக்கம்.)

1. *பஞ்சாநந தநுத்பூதாந் பஞ்சாக்ஷர மநூபமாந்*
*பஞ்சசூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாந் ஜகத்குரூந்.*

2. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே——யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்.

3. உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

4. பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போற்
றங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய ருரைக டமைநீக்கி
யங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றேன் றருளும் வீரசைவ
சிங்கநிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5. மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

# திருமுருகாற்றுப்படை.

இது பாண்டிநாட்டில் மதுரைப்பதியில் அங்கையற்கணம்மையாரோடு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுள் அருளிய சங்கப் பலகையின்கண் அக்கடவுளுடன் ஒப்ப வீற்றிருந்து தமிழாராய்ந்த மகிமை பொருந்திய நக்கீரனார் முதலிய நல்லிசைப் புலவர்களால் அருளிச் செய்யப்பெற்று அச்சான்றோராலேயே தொகுக்கப்பெற்ற தொகைநூல்களுள் ஒன்றாய பத்துப்பாட்டினுள் ஒன்று; ௩௱௧௭ அடிகளையுடையது; வீட்டின்பத்தைப் பெறுதற்கு விழைந்துவந்தானோர் பக்குவமுடைய சீடனாகிய இரவலனை அவ்வீட்டின்பத்தைப் பெற்ற பெரியாராகிய ஓராசிரியர் முருகக்கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அக்கடவுளை கடைச் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவரும், மதுரைக் கணக்காயனார் மகனாருமான நக்கீரனார் பாடியது. இப்பாட்டு முருகக் கடவுளுடைய திருப்பதிகளுட் சிறந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் முதலிய தலங்களுள் அவர் எழுந்தருளியிருக்குந் தன்மையையும், அப்பெருமானது ஒப்புயர்வற்ற கருணைத் திறத்தையும் பாராட்டிக் கூறும். இதன் வரலாறு,—ஒரு மலைக்குகையில் முன்னமே அடைக்கப்பட்டிருந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரோடு ஒருவரைச் சேர்த்து ஆயிரவராக்கி உண்ணக்கருதி, சிவபூசை செய்யுங்கால் சிறிது கலக்கமுற்ற காரணத்தால் தம்மையும் அக்குகையில் அடைத்து விட்டு உண்ணுதற்கு நீராடப்போன ஒரு கொடிய பூதத்தை வெல்லக் கருதிய நக்கீரர் முருகக் கடவுளைக் குறித்து இத் திருமுருகாற்றுப் படையைப்பாடி அப்பூதத்தினின்றும் விடுதலை பெற்றனர் என்பர். இவ்வரலாற்றின் விரிவு சிவப்பிரகாச சுவாமிகளியற்றிய திருக்காளத்திப் புராணத்துள்ள நக்கீரச் சருக்கத்தால் விளங்கும். முருகக்கடவுள் நக்கீரனாரைச் சிறைமீட்டருளிய இத்திருவிளையாடல் ஒவ்வொரு வருடத்தும் திருப்பரங்குன்றத்தில் பங்குனி உத்திரத் திருநாள் நான்காவது விழாவில் நடைபெற்று வருகின்றது. முருகக்கடவுளுடைய திருவருளைப்பெற விரும்புவோர் இத்திருமுருகாற்றுப்படையை நியமமாக அன்புடன் பாராயணம் பண்ணுதல் நலமென்று பெரியார் கூறுவர். திருமுருகு - திருமுருகனிடத்தில், ஆற்றுப்படை - ஆற்றுப் படுத்தது.

ஆற்றுப்படுத்தல் - வழிப்படுத்தல். ஐ விகுதிபெற்ற தொழிற் பெயர் பாட்டிற்கு ஆகுபெயராயிற்று: எனவே திருமுருகனிடத்தே வழிப்படுத்ததாகக் கூறிய பாட்டு என்பது இதன் பொருள்.

சிவாகமத்துள் ஒன்றாகிய வாதுளாகமத்தில் வீரசைவ சித்தாந்தத்தைச் சண்முகப்பெருமானுக் கருளியதாகக் காணப்பெறுவதாலும், அப்பெருமானே ஜகத்குரு ஸ்ரீ இரேணுகாசாரியருடைய சீடராகிய அகத்திய முனிவர்க்கு ஒருபொழுது ஆசிரியராக நின்றருளியதாலும், அம்முருகப் பெருமானே சென்னபசவேசராக அவதாரஞ் செய்து சடுஸ்தலாசார முறைகளை நாட்டியதாகச் சரித்திரங் கூறுதலானும், வீரசைவ பஞ்சகோத்திரங்களுள் ஸ்கந்தகோத்திரம் ஒன்றாதலாலும், வேண்டுங் காலங்களிலெல்லாம் முருகப்பெருமான் சடுஸ்தல சங்கம மூர்த்தியாக அவதாரஞ்செய்து வீரசைவதருமத்தை நிலைநாட்டுவதாகப் பிரமாணம் உண்மையானும், வடநாட்டின்கண் தலைசிறந்து விளங்கும் சித்ரகல்துருவம் ஸ்ரீஜகத்குரு சூனியசிம்மாசன கர்த்தராகிய சுவாமிகளுக்கு முருகே சுவாமிகள் என வழங்கிவரும் வழக்குண்மையானும், அதுபற்றியே கும்பகோணம் பெரிய மடத்தில் முருகப்பிரம்ம தர்க்க சாரங்கதேவ தேசிகேந்திர சுவாமிகளெனச் சாசனம் உண்மையானும், பொம்மயபாளையம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் மடாலயத்திலும், திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீஞானியார் மடாலயத்திலும் முருகப்பெருமானை இலிங்கதாரணமுடைய ஜங்கமமூர்த்தியாக வழிபாடியற்றிவரும் வழக்கம் நாளும் இருத்தலினாலும், அங்குள்ள பழமையான முருகப்பெருமானுடைய விக்கிரகத்தின் சிரத்தில் இலிங்கதாரணம் காணப்பெறுவதாலும், நக்கீரர் முதலிய சங்கப்புலவருடைய மடமும் அத்திருவிழாவை நடாத்துஞ் சுதந்தரமும் மதுரையின்கண் இன்னும் வீரசைவர்களுடைய ஆளுகையிலிருத்தலினாலும் வீரசைவர்கள் கல்வி, செல்வம், சமயாசாரம் முதலிய இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுய்தற்குரிய நெறியில் முருகப்பெருமானை ஜங்கமமூர்த்தியாக வழிபாடியற்றி அவரருளைப் பெறுதற்குரியரென விளங்குகின்றது. ஆதலால் இத்திருமுருகாற்றுப்படை யென்னும் அரியதொரு பாடலைப் பழுதற ஓதியுணர்ந்து இன்புறுதலும் உரியதெனக்கருதி இதன்கண் செவ்விய நடையிலெழுதி வெளிப்படுத்தக் கருதினேம். அப்பெருமானது முழுக்கருணை முன்னின்று உதவுவதாகுக.

## திருமுருகாற்றுப்படை.

(க. திருப்பரங்குன்றம்.)

---

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்,
கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்டார் புரளு மார்பினன்,
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிறைத்த சில்கா ழல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வேன்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்,
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்டு
உருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரல்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்

செல்வுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரியன் அதா அன்று.

(தொடரும்)

---

# சிவயோகம்.

ஆஸ்தான வித்துவான் சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

சிவயோகம் சாதனரூபம் என்றும், சாத்தியரூபம் என்றும் இரு வகைப்படும். சாதனரூபமான சிவயோகம் ஐந்து பிரிவினையுடையது. சாத்தியரூபமான சிவயோகமோ ஒன்றாயுள்ளது. சாத்தியரூபமே மோக்ஷபலம் என்ற ஐக்கியத்தலம்; இதற்கே இலிங்காங்க சாமரஸ்யம் எனவும் பெயருண்டு. பக்தன், மாகேசன், பிராணலிங்கி, பிரசாதி, சரணன் என்னும் அங்கத் தலங்களைந்தும் சாதன ரூபங்களாகின்றன. இவற்றுள் முதலாவதான பக்தத்தலத்தை விவரிக்கின்றோம். பக்தத் தலமென்பது பயன்வடிவான சிவயோகத்தின் முதலாவது அங்கம். இச்சாதனங்களில்லையாயின் மோக்ஷபலன் எப்பொழுதும் கிடைத்த லரிது. ஆதலினால் பக்தன் முதலாய ஐந்தனுள் முதலாவதான பக்தத்தலத்தை அப்பியாசித்தே தீரவேண்டும். ஆனால் இலிங்கதாரண தீக்ஷாசம்பன்னனாகிப் பக்தத் தலத்திற்குட்பட்ட இயம நியமங்களைச்

சாதித்தல் வேண்டும். பக்தன் முதலிய ஐந்துத் தலங்களில் இயம நியம முதலிய ஏழு யோகாங்கங்களும் அடங்குவனவென்றும், ஆறுவது ஐக்கிய தலத்தின்கண் பாஞ்சாலி யோக நூலுள் கூறப்பட்ட சமாதி என்னும் எட்டாவது அங்கம் சேருமென்றும் வியாசமகரிஷி தமது இலிங்கபுராணம் உத்தரபாகம் 21-வது அத்தியாயத்தில் கூறியிருக்கின்றனர். பக்தத்தலத்திற்குட்பட்ட இயமநியமங்களைச் சாதிக்காதுவிடின் மிகச்சஞ்சல சுபாவமுடைய சித்தம் சிவலிங்கத்தின்கண் எதனாலும் நிலைபெறாது.

இந்தச் சித்தம் என்னுங் குரங்கைச் சிவலிங்கத்தின்கண் கட்டுவதற்காகவே பக்தாதி ஐந்துத் தலங்கள் ஐந்து கயிறுகளாக இருக்கின்றன. அவற்றுள் முதலாவதான பக்தத்தலமே இன்றியமையாத கயிறுகின்றது (உபாயம்). ஆதலினால் ஸ்ரீஜகத்குரு இரேணுக பகவத்பாதர் ஆறங்கத் தலங்களுள் பக்தத் தலத்தையே முதற்கண் கூறியுள்ளார். சித்தத்தின் சலனத்தைப் போக்குவது எளிதன்று. சித்தத்திற்கும் பாதரசத்திற்கும் சலனத்தன்மை இயற்கைக் குணமாகின்றது. பாதரசத்தின் சலனத்தைப் போக்குதற்கே பலவுபாயங்களைச் செய்ய வேண்டுமாயின், எந்த இந்திரியத்திற்கும் எட்டாதிருக்கின்ற சித்தத்தின் சலனத்தைப் போக்குவதற்குப் பலவுபாயங்கள் வேண்டுமென்பது மிகையாகாதன்றோ! அத்தகைய உபாயங்களே பக்தாதி ஐந்துத்தலங்களாகின்றன. பாதரசங் கட்டுப்பட்டால் பெருரோகம் என்னுங் குஷ்டரோகம் முதலியனவும் விலகுகின்றன. அதுபோல சித்தமானது மேற்கூறிய ஐந்து உபாயங்களினால் புலன்களின்மேற் செல்லும் பற்றைவிட்டு உண்ணேக்கமுடையதாகி தியேயவஸ்து என்னுந்தனது சொரூபத்தில் நிலைபெற்றால் சுத்தியடைகின்றது (விகாசத்தையடைகின்றது). சித்தமே சித்சத்தியாகின்றதென்றால் எது தான் அதற்குத்தானாகவே சித்தியாகாது? சருவஞ்ஞத்துவ முதலிய எல்லாக் குணங்களும் சித்தியாகின்றன. இக்கருத்தின்படியே "ரஸோபத்தோ மனோபத்தம் கிம்நசித்யதி பூதலே" என்று கூறப்பட்டுள்ளது. இயம நியமங்களையுடைய பக்தத்தலம் சித்திக்காவிடின் மகேசாதித் தலங்கள் சித்திப்பதில்லை. ஆதலினால் பக்தத்தலமானது சிவயோகமென்னுங் கட்டிடத்திற்கே முக்கியமான தளமாகின்றது. முதற்கண் பக்தத் தலத்தைச் சேர்ந்த இயம நியமங்களைச் சாதித்தல் வேண்டும்.

இயமம் என்னும் முதலாவது யோகாங்கம் அகிம்சாதி ஐந்து பேதங்களையுடையது. திரிகரணங்களினால் பிராணிகளைத் துன்புறுத்தா திருப்பதே அகிம்சை. மனம் வாக்குக் காயங்களினால் பிறருக்குத் துன்பமுண்டாக்கலாகாது. இந்த அகிம்சையைச் சாதிக்கவேண்டுமானால் முதலில் காமக்குரோதாதி துர்க்குணங்களைக் களைதல்வேண்டும். காமத்தைப்படைத்த மனிதனுக்கு விரும்பியசுகம் கிடைக்காவிடின் அவன் எளிதில் கோபத்தின் வசமாகின்றான். அக்கோபத்தினால் இம்சையான வினைகள் உண்டாகின்றன. ஆதலினால் விடயப்பற்றுக் களை விலக்கிவிட்டு நித்தியானந்த வடிவமான நன்னெறியைப் பிடித்தல்வேண்டும். அந்த ஆனந்தவடிவமான பொருளே இஷ்டலிங்கம். 'ஆனந்தரூப மனயோரிஷ்டலிங்க முதாஹ்ருதம்'' என்றுத்தியிருக்கின்றது. இந்த இலிங்கம் புறத்தில் இஷ்டலிங்கமென்றும், உள்நோக்கமுடையதானால் பிராணலிங்கமென்றும் பெயரடைகின்றது. யாருக்குச் சிவலிங்கதாரணமில்லையோ தரித்திருந்தும் அதற்குப் பூசை முதலியவற்றைச் செய்யாதிருக்கின்றனரோ அவரது சித்தம் விஷயப் பற்றுக்களைவிட்டு அகமுகமாவது இல்லை. ஓர் சிறுவருடைய அருவருக்கத்தக்க மண்ணைத்தின்னுங் கெட்ட பழக்கத்தை விட்டபிறகே அவனுக்கு ஒரு பழத்தைக் கொடுத்தல்வேண்டும். இல்லாவிடின் மண்ணைத் தின்னுவதை விடமாட்டான். அவ்வாறே சித்தமாகிய சிறுவன் விஷயப்பற்று என்னும் மண்ணை விட்டபின்னரே சிவலிங்கம் என்னும் ஆனந்தரூபமான பழத்தை வேண்டுவன். குருமூர்த்தியினால் இலிங்கம் தனக்குக் கிடைத்திருப்பினும் சிரத்தாபக்தியினால் அந்த இலிங்கசம்பந்தமான பூசை தியானுதிகளைச் செய்யாதிருப்பின் அதன் ஆனந்த சொரூபம் தனக்குக் கிடைப்பதில்லை. ஆதலினால் விஷயங்களில் தோஷதிருஷ்டியைவைத்து அவைகளிலுள்ள அவாவைமாற்றி நித்திய சுகரூபமான இலிங்கத்தினிடத்தில் நிலைபெறச் செய்தால் அதுவே பக்தியெனப்பெறும்; அந்த பக்தி உறுதியான பின்னர் அகிம்சாதி தருமங்கள் நிலைபெறுகின்றன. இந்த அகிம்சை என்னும் முதலாவது அங்கம் யாருக்குச் சித்திக்கின்றதோ அவரது சமீபத்தில் ஒன்றுக் கொன்று விரோதமுள்ள அரவு கீரி, பசு புலி முதலிய பிராணிகள் தமது விரோத பாவனையைவிடுத்து பரஸ்பர அன்புடன் தழுவிக் கொள்கின்றன என்று, பாதஞ்சல யோகநூலுள் கூறப்பட்டிருக்கின்றது. இந்த நிகழ்ச்சி அகத்தியர் வசிட்டர் கண்ணுவாதியோர் சரித்

திரங்களிலன்றியும் இப்பொழுதும் சில மகான்களிடத்தும் காணப்படுகின்றது. "சிவலிங்கதாரணன் பிராணிகளுக்குத் துன்பத்தைக் கொடுத்தலாகாது. பிறரால் கொடுப்பித்தலாகாது; கொடுப்பவருக்கு உதவி புரியலாகாது; தானே செய்யினும், செய்விப்பினும், செய்வோர்க்கு உதவி புரியினும் பிராணிகளுக்குத் துன்பமே ஆகின்றது." சில அறிவீனர்கள் தாம் பிராணி இமிசையைச் செய்வித்தும் யான் பிராணி இமிசை செய்வதில்லை, அவர் செய்தனர், அவருக்கே அப்பாவம் நமக்கில்லையென்று தெளிவடைகின்றனர். அங்ஙனம் தெளியலாகாது. பிறர் செய்யினும் காரியத்தில் துன்புறுத்திய பாபம் வந்து அதனால் பெருந்துன்பத்தை அனுபவிக்க வேண்டியதாகின்றது. எப்படிப்பட்ட துன்பத்தையுஞ் செய்வதில்லை என்றிருந்தால் விரோத பாவனையுள்ள பிராணிகளும் விரோதத்தை விடுத்து அன்பு பாராட்டுகின்றன. எவனுடைய சித்தம் காமவசமாகின்றதோ அவனிடத்தில் குரோதபுத்தி தவிராது நிற்கும். குரோதமுள்ளவனே நன்மை தீமையின் பகுத்தறிவுகெட்டுபிராணிகளைத்துன்புறுத்துவன். பிறர்பொருளை இச்சிப்பவன், பிறர்மனை விரும்பல் முதலிய பாபகாரியங்களில் தலையிட்டு துன்புறுவனுவன். ஆதலினால் அகிம்சையைச் சாதிப்பவன் முதலில் காமமென்னுந் தீயகுணத்தை விடல்வேண்டும். மக்களிடையில் காமத்தை விடுவது எளிதன்று. அதனாலேயே பண்டைக்காலத்திய தபசிகள் மலைக்குகைகளில் வசித்துவந்தனர். சங்கத்தினால் காமமும், காமத்தினால் குரோதமும், குரோதத்தினால் மோகமும் தோன்றுதபடி அவற்றின் அழிவைத் தேடவேண்டும். வேள்வியிலும் பசு இம்சையைச் செய்வது அநித்தியமாகிய சுவர்க்கசுகத்தின் காமத்தினாலன்றோ? துர்க்கை, காளி, மாரி, கறுப்பண்ணன் முன்னிலையில் பிராணியைக் கொல்வதும் இச்சித்தபலன் கிடைக்குமென்ற மயக்க வடிவான காமத்தினாலல்லவா? ஒருமித்து நோக்கினால் பிராணியிமிசையென்பது மாமிசத்தைத்தின்னுங் காமத்தினாலாவது உயர்ந்த பதவியின் காமத்தினாலாவது உண்டாகின்றது. ஆதலினால் உபிமக் துன்பத்திற்கே காரணமான காமத்தை விடல்வேண்டும். கட குண தம்முடைய பிராணன் நிலைப்பதற்குத்தானிய முதலிய உணவுத்தாரும் படைத்திருந்தும் தம்மோடொத்த பிராணியாகிய பசு பொருண்மை றைக் கொல்லுவானேன்? பிராணியைக்கொன்றால், விடும். இத் அரசன் மனிதக் கொலைக்குக் கடுமையான தண்டனை எழுந்த நிலையாகிய

பிரமாணமும், காரணங்களாகின்றன. உபநிஷத்துக்களின் காலத்தது என்பதற்கு சுவேதாஸ்வதர உபநிஷத்தும், பிரமோப நிஷத்தும் பிரமாணங்களாகின்றன. ஸ்மிருதிகளின் காலத்ததென்பதற்கு கௌதம ஸ்மிருதி வாக்கியம் பிரமாணமாகின்றது. புராணங்களின் காலத்ததென்பதற்கு இலிங்கபுராணம், பதுமபுராணம், ஸ்காந்தபுராணம், சங்கர சங்கிதை முதலானவை பிரமாணங்களாகின்றன. இதிகாசங்களின் காலத்ததென்பதற்கு மகாபாரதத்தின் வீடுமர் தருமர் இருவர்க்கும் நடந்த சம்வாதமும் பிரமாணமாகின்றது. இத்தகைய பிரமாணங்களிலிருந்தும் பல வித்துவான்கள் ஆங்காங்கு எழுதிய உத்திகள் (Enterpellation) இப்பொழுது சேர்க்கப்பட்டவைகளாக ஏனிருக்கப்படாதெனத் தருக்கிக்கின்றனர். ஆதலினால் இவைகட்குதவியாக சரித்திர சம்பந்தமான வேறு பிரமாணங்கள் வேண்டியிருக்கின்றன.

சிலவற்றை மேல்நாட்டு ஆங்கிலப்புலவர்கள் ஆராய்ந்திருக்கின்றார்கள். ப்ரபசர் H. H. வில்சன் சாஹேபர் அவர்கள் ஸ்ரீ சங்கராசாரியர் சந்நிதி சிஷ்யரான ஆனந்தகிரி யென்பவரால் எழுதப்பட்ட சங்கர திக்விஜயம் சங்கராசாரியார் காலத்திலேயே எழுதப்பட்டதென நிச்சயித்து, அதன்கண் எழுதப்பட்டிருக்கிறபடி சங்கராசாரியரவதாரத்திற்கு முன்னரே ஆறுவித சைவர்கள் இருந்தார்களென்றும், அவர்களில் ஜங்கமர் என்பவர்கள் இலிங்கத்தைச் சிரசின்கண் தரித்திருந்தார்களென்றும் எழுதியிருக்கின்றார். இந்த விஷயத்தைப் பிரமாணமாக அங்கீகரிக்கின்றார்கள். இதனால் மேலான இலிங்கதாரணமதம் சங்கராசாரியர் காலத்திற்கு முன்னரே பூருவத்தில் இருந்ததெனத் தெரிகிறது. ஸ்ரீ சங்கராசாரியர் காலம் கி. பி. 800-வது வருடமென உறுதிப்படுத்துகின்றனர். ஆதலினால் இலிங்கதாரண மதம் ஸ்ரீ பசவேசருடைய காலத்திற்கு முன்னரே சுமார் 300 வருடங்கட்கு முற்
பட்ட காலத்திலும் இருந்ததென அறியக் கிடக்கின்றது. அமே
வில்சன் சாகேபர் முன்னர் கூறிய ஆறுவித சைவரது காலச்
சிவகீதை, ருத்ரயாமள தந்த்ரம் முதலான கிரந்தங்கள் பிரசா
இருந்தனவென நிச்சயித்திருக்கின்றார். அந்த சிவகீதையில்
தாரணம் சொல்லப்பட்டிருக்கின்றது. வார்த்திக ஷட்பதி
திரமாயிருக்கிற கன்னட சிவகீதையில் மூலகிரந்தப்

தாரண விஷயம் விளக்கப்பட்டுள்ளது. இதனால் கி. பி. 800-ல் வீர சைவ மதபோதக கிரந்தங்கள் இருந்தனவெனத் தெரியவருகின்றது. அநேக ஆகமங்களும் அக்காலத்திலிருந்தனவென ப்ரபெசர் வில்சன் சாஹேபர் சொல்கின்றனர். இந்த எல்லா விஷயங்களினாலும் பசவேஸ்வரர் புதிதாக இலிங்கதாரணமதத்தை உண்டாக்கினாரென்பது ஆகாயத்தாமரைபோல் பொய்மையென யாவரும் உணரத்தக்கது. வீரசைவ மதப்பிரசாரம் பசவேசருடைய காலத்திற்கு முன்னரே சிலரால் சிறப்பாக ஆரம்பிக்கப்பெற்றுவந்ததெனச் சில காரணங்களால் தெரிய வருகின்றது. அதுவரையிலும் அழியாமலிருந்து பசவேசருடைய காலத்தில் பிரசாரவேலை மிகப்பெருமிதமான நிலையில் நடந்திருக்க வேண்டுமெனத் தெரிகின்றது. வீரசைவ மதப்பிரசாரத்தில் எல்லோரிலும் ஸ்ரீபசவேசரே சிறந்து விளங்கினாரென ஊகிக்கத்தக்கது. அவருக்குப்பின்னர் வீரசைவப் பிரசாரவேலை நடந்துவந்ததெனினும் அவரைப்போல் சிறந்தவேலை செய்தவர் யாருமில்லை. வீரசைவ மதப் பிரசாரஞ் செய்தவர்களில் பசவேசருடைய முயற்சி எவ்வகையினும் போற்றத்தக்க நிலைமையிலிருந்தபடியால் அவரே இலிங்கதாரண மதத்தைப் புதிதாக நிறுவினாரெனச் சிலர் மயங்கிக் கருதியிருக்கின்றனர். சில பிரமாணங்களினால் அந்த மயக்கம் விலகுவதாயிற்று.

சேடரதாசையர் என்ற சரணர் இராமநாதம் என்ற பெயரால் கி. பி. 1040ல் வசனங்களை எழுதியிருக்கின்றதை ஆர். நரசிம்மாசாரியார் தமது கவிச்சரித்திரத்தில் எழுதியிருக்கின்றனர். இந்த சேடரதாசையருடைய பெயரை பிரம்மசிவன் என்ற கவி தனது கிரந்தத்தில் குறிப்பிட்டுள்ளார். பிரம்மசிவனது காலத்திலே சைவமத சம்மந்தம் பெரும்பாலும் இருந்ததெனத்தெரிகிறது. மேரமிண்டய்யன் என்ற சரணர் கி. பி. 1100ல் இராமேசுவரலிங்கம் என்ற பெயரால் [illegible]சனமொன்று எழுதியுள்ளார். இது பசவேஸ்வரர் காலத்திற்கு [illegible]ன்னமேயென ஏற்படுகின்றது. ஆதலினால் வீரசைவ மதப்பிரசாரம் [illegible]ஸ்வரரே முதலில் செய்தாரென்று ஏற்படவில்லை. அவருக்கு [illegible] பூருவத்தில் இருந்ததெனத்தெரிகின்றது. பசவேஸ்வரர் [illegible] பெருமுயற்சிசெய்து நல்ல சீர்திருத்தஞ்செய்தமையால் [illegible] அவருக்கே வருவதாயிற்று. கேரெய பத்மாசர் என் [illegible]ரக்குறைய பசவேஸ்வரர் சமகாலத்தவர். அவரது

தீக்ஷாபோதம் என்ற கன்னட கிரந்தத்தில் இலிங்கதாரண சம்பந்தமான ஆகம சுலோகங்கள் காட்டியுள்ளன. சங்கராசாரியார் காலத்திலிருந்து பசவேசர் காலம்வரை நடந்த பலவிஷயங்கள் மறைந்து போயின! இவைதான் ஞாபகத்தில் வைக்கவேண்டியவை. பூகம்பத்தினுல் அமிழ்ந்த பட்டினம்போல் அவையனைத்தும் வெளியாகாமற்போயின. வீரசைவமத சரித்திர ஆராய்ச்சியுடையார் இதன்கண் தங்கருத்தைச் செலுத்துவாராயின் பெரிதும் பயன்தரும். இதுவரை கூறியவாற்ருல் வீரசைவ மதப்பிரசாரம் ஸ்ரீபசவேசரது காலத்திற்ருன் தோன்றியதென்பதுதவறு. ஸ்ரீ சங்கராசாரியார் காலத்திற்கு முன்னரே பூருவத்தில் இருந்ததென மேனுட்டு சரித்திர ஆராய்ச்சியாளரால் எழுதப்பட்டுள்ளது என அறிகின்ருேம். இது சிவானுபவம், என்ற பத்திரிகையில் கண்டது.

---

# ஸ்ரீபசவேச விஜயம்.

## கருணையும் சீர்திருத்தமும்.

நமது அமைச்சராகிய பசவேசர் உலகத்தின்கண் தோன்றும் மக்கள் முதலிய பிராணிகளனைத்தும் கடவுளுடைய புத்திரர்களென உணர்ந்திருந்தனர்; தம்முடைய சகோதரர்களெனக் கருதியிருந்தனர்; அதனுல் யாரிடத்தும் உயர்வு தாழ்வு கருதாது அன்பும் அருளும் உடையரா யிருந்தனர்; எல்லோரையுஞ் சீர்திருத்த முயற்சித்தலே தமது கடமையெனக்கொண்டு அதற்கான முறையில் ஆட்சிபுரிந்துவந்தனர். இவரது பெருந்தன்மையான பொதுநோக்கத்தைக் கண்டு குறுகிய அறிவுடைய சிலர் இவர்பால் பொருமையுற்றனர். பிறர் பொருளையும் புகழையும் கண்டு மனஞ்சகியாதிருப்பது பொருமை. பொருமை எனினும் அழுக்காறு எனினும் ஒன்றே. பொருமைக் குணமுடையார் பகைவரில்லாமலேயே கெடுவர். பொருமைக் குணமுடையார் தாம் கெடுவதேயன்றி அவரைச் சேர்ந்த சுற்றத்தாரும் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றிக் கெடுவர். பொருமையென்னும் பாவி செல்வத்தையழித்து நரகத்தில் தள்ளிவிடும். இத்தீக்குணமல்லவா உயர்ந்த நிலையிலிருப்போரையும் தாழ்ந்த நிலையாகிய

நரகத்தில் தள்ளிவிடும் வன்மையுள்ளது. அறிவுடையார் இதனை யாராய்ந்து யாரிடத்தும் பொறாமை கொள்ளார்.

இப்படிப்பட்ட பொறாமையாகிய பேயால் பிடிக்கப்பட்ட சிலர் நம் பசவேசர்பால் இல்லாததும் பொல்லாததுமாகிய பழிச்சொற்களை யேற்படுத்தி அரசனிடமுங்கூறி அவர்க்குத் துன்பமுண்டாக்கத் தம் மாலான முயற்சிகளைச் செய்தனர். ஓர்நாள் விச்சலமன்னன் சிங்காதனத்தில் கொலுவீற்றிருந்தனன். அரண்மனைத் தொழிலாளரிற் சிலர் வந்து அரசனைக்கண்டு வணங்கி, 'கல்யாணபுரிக்கு அதிபதியே! யாங்கள் சேவகர்களாயிருந்து இட்ட பணிகளைச்செய்து பிழைத்துவரும் தொண்டர்கள்; ஆயினும் அரண்மனையில் நடக்கும் அரசியலுக்கு விரோதமான செயல்களைக் கண்டால் தங்கட்குத் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்கலாமா? இருப்போமாயின் எங்களினும் யார் இராஜத் துரோகிகள்! உண்மையை விண்ணப்பித்துக்கொள்ளலாமென நினைக்கிறோம். திருவுள்ளக் கருத்து யாதோ? கட்டளையிடின் உண்மையை உரைக்கின்றோம்." என்றனர். விச்சலராஜன் 'தொண்டர்களே? அஃது யாது? உள்ளவாறு ஒளியாது உரையுங்கள்" என்றனன்,

தொண்டர், "மன்னர் மன்ன! அரசியலுக்கான தொழில்முறைகளையெல்லாம் சரிவர நடத்தவும், தேசத்தின் உன்னத நிலையைக் காப்பாற்றவும், தங்கட்குப் பிரதிநிதியாக ஏற்படுத்தியிருக்கும் முதல் அமைச்சராகிய பசவேசர் அரசியலுக்குரிய நிதியை மேன்மேலும் வரச்செய்வதை விடுத்து கேட்டவர்க்கெல்லாம் தோன்றியவாறு அளவின்றிக் கொடுத்துப் பண்டாரத்திலுள்ள பொருள்களையெல்லாம் செலவழித்து வருகின்றார். இன்னும் சிலநாளில் பொருளனைத்துங் கெட்டுக் கருவூலம் வறிதாகிப்போய்விடுமே என் செய்தும்" என்றனர் எனவே, அரசற்கு உடனே கடுங்கோபந்தோன்றிற்று, தோன்றினும் அமைச்சரைத் திடீரென அழைத்து வினவுதல் தகாதென எண்ணினன்; எண்ணி வேறு சிலரைக்கொண்டு விசாரித்தனன். அவர்களும் பசவேசர் அளவு கடந்து தானஞ் செய்கின்றனர். அதுவும் வருவாயைக் கடந்ததாகவும் இருக்கலாம்" என்றனர். உடனே அரசர் பெருமான் ஓர் நாள் திடீரென்று அரண்மனையின் பண்டாரத்துள் (பொக்கிஷம் அல்லது கஜானா) சென்று பொருளனைத்தும் கணக்கிற்

கண்டவாறு இருக்கின்றனவோ என ஆராய்ந்தனர். ஆராயவே ஒரு பைசாவும் குறைவின்றி யிருக்கக்கண்டு ஒருபால் மகிழ்ச்சியும் ஒருபால் நாணமும் உடையனாகச்சென்றான். பசவேசர் செய்துவரும் தான தருமங்களைக்காணும் யாவரும் இவற்றிற்குக் காரணமான பொருள் வரும் வழியாதோவென வியப்பும் அடைவர்.

தினந்தோறும் எங்கும் பூசையும் ஆராதனையும் நடக்கக் கல்யாண புரம் வானவருலகம்போல் விளங்கியது. எங்கும் சிவபக்தர்கள் கூட்டங்கூட்டமாகக்கூடிக் கடவுளது புகழைப்பாடி வருவர். அநேக சங்கம சந்நியாசிகள் ஊர்தோறுஞ் சென்று குருபக்தி, சிவபக்தி முதலியவற்றை உபதேசஞ் செய்துவருவதன்றியும் ஒவ்வொருவூரிலும் சிவாலயங்களைக் கட்டுவித்து யாவரையும் பக்தி மார்க்கத்தினால் ஒழுகும்படிச் செய்தனர். இளமைப் பருவத்திலேயே உயிர்க்கொலையைக் கண்டு தகாத செயலெனப் போதிக்கத்தொடங்கிய பசவேசர் அமைச்சர் பதவியைப் பெற்றகாலத்தில் கடவுட்குப் பலியிடுங் கொடுந் தொழிலைக் கண்டிக்காது விடுவாரா? கடவுளை முன்னிட்டுப் பலியிடுங் கொடுந்தொழிலைத் தமதாட்சிக்குட்பட்ட நாடெங்கும் தலையெடுக்காத படி அறவே ஒழித்தனர். தேயத்தின் தன்னிலைக்குப் பசுபரிபாலனம் செய்வது முக்கியமெனக்கருதி ஊர்தோறும் உபதேசம் செய்துவரும் படிப் பலதூதர்களை அனுப்பிவைத்தனர். பசுக்களால் மனிதர்க்குண்டாகும் பயனை எடுத்துக்காட்டுவதேயல்லாமல் பசுக்கள் இனமெல்லாம் நந்தி தேவரது அவதாரமென்றும், அக்கடவுளே மானிடசேவை செய்யப் பசுக்களின் உருவெடுத்து வந்திருக்கிறார் என்றும், போதித்து மனிதசமூகத்தில் ஓர்வித பக்தியை உண்டாக்கினர். மக்களும் பசுக்களைக் கடவுளாகப்பாவித்துப் பூசை முதலியன செய்துவந்தனர். இதற்குச்சான்றாகக் கர்நாடகத்தில் ஊர்தோறும் பற்பலவிடங்களில் இன்னும் ஸ்ரீ பசவதேவர் (நந்திதேவர்) ஆலயமிருப்பதைக் காணலாம். வாரத்துக்கொருமுறை திங்கட்கிழமைதோறும் நந்திதேவர் பூசை செய்ய அதுவே ஏற்றநாளெனக் கருதிப் பயிர்த்தொழில் செய்பவரெல்லாம் திங்கட்கிழமை விடுமுறை நாளாக எண்ணி வேலையினைத் தையும் விடுத்துப் பசுக்களை அன்புடன் பூசித்து ஸ்ரீ பசவேசராலயஞ் சென்று பூசை செய்துவரும் வழக்கத்தை இன்றும் நிலவ நிலைநா னர். அன்று முழுதும் பசுக்களிடத்தும் எருதுகளிடத்தும்

வாங்குவதில்லை. அன்றியும் பசுவினங்களைக் கடவுளாகக் கருதினமை யால் அவைகளைத் துன்புறுத்தி வேலைவாங்க அவர்கள் மனம் உடன் படாமலிருந்தது. வயதுசென்ற பசுக்களை அன்புடன் பராமரித்து வந்தனர். கர்நாடகத்திலுள்ள செழிப்பான காட்டில் தண்ணீர் வசதி யுள்ள இடத்தில் சக்தியற்ற பசுக்களுக்காக ஆங்காங்கு மாட்டுப்பட்டி யை ஏற்படுத்தி அங்குள்ளபசும்புற்களை மேய்ந்து சுகமாகத் தங்கி யிருக்கும்படிச் செய்தார். இப்படி ஏற்படுத்தியதனால் நஷ்டமொன்று மின்றி இலாபமே உண்டாயது. எங்ஙனமென்றால், சக்தியற்றபசு வினங்களை இறைச்சிக்காரனுக்குக் குறைந்தவிலைக்கு விற்றுவரும் வழக் கமிருந்தது. நம் பசவேசர் ஆங்காங்கே கோசம்ரக்ஷணைச் சாலைகளை ஏற்படுத்தவே கொலைக்கு விற்கும் குறைநீங்கிற்று. உபயோகமற்ற இளைத்த மாடுகளெல்லாம் காட்டிற்குள் சென்று தழைத்த பசும் புற்களை மேய்ந்து தூய்மையான தண்ணீரை அருந்தி இழந்த சக்தியை மீண்டும் பெற்றுக்கன்றுகளையீன்று பால் வெண்ணெய்களைக் கொடுக்க ஏற்றவாயின அதனால் அரசற்காயினும், குடிகட்காயினும் சிறிதும் நட்டமின்றி இலாபம் உண்டானதேயன்றிப் பசுக்கொலைக் குற்றத்தி னின்றும் தப்பிக்கும் அறமும் உண்டாயது.

நம் பசவேசர்க்குப் பசுக்களின்மேல் இவ்வளவு கருணையிருக்கு மாயின் எவற்றினும் உயர்ந்த பிறவியை யடைந்துள்ள மக்களிடத்து அளவற்ற கருணையிருந்தது எனக்கூறுதல் வேண்டுமா? கடவுளே தந்தையென்றும், மக்களாவார் யாரும் தம் சகோதரர் என்றும் பாவிக் கும் நோக்கமுடைய பசவேசர் மனிதருள் சிலர் மாத்திரம் இன்புற்றி ருக்கப் பலரும் துன்பக்கடலுள் மூழ்கியிருக்கக் காணுவரேல் கணமும் மனஞ் சகித்திருப்பாரோ! சகியார். பகல் முழுவதும் வருந்தி வேலை செய்து சிறிது பணம் சம்பாதித்தபோதிலும் பலர் உண்ண வுணவும் உடுக்க வுடையுமின்றி வருந்திவருவதைக் கண்டார். இன்னுஞ் சிலர் தாம் பிழைப்பதற்குக் கூலிவேலையுங்கிடைக்காது யாதொரு செயலு மற்றுச் சோம்பேறிகளாய்க் காலங்கழிப்பதையுங் கண்டுணர்ந்தார்.

ஓர்நாள் அருகிலிருந்த ஓர் சிற்றூருக்குச் சென்றுகொண்டிருந்த நம்வள்ளலார் வழியிலுள்ளதோர் சிறிய கிராமத்தின் ஓர் பழங் குடிசையிருக்கக்கண்டார். அக்குடிசையினுள் சிறு குழந்தைகளின்

அழுகுரலைக் கேட்டார். அதனிடையே ஓர்பெண்ணின் தாழ்ந்த குரலோசையுங் கேட்டது. பசவேசர் தாம் ஊர்ந்துசென்ற குதிரையை விட்டிறங்கி நின்றுகொண்டு தமதுசேவகனைவிட்டு அக்குடிசையில் நிகழும் நிகழ்ச்சியைக் கண்டறியும்படி யேவினர். அச்சேவகன் சென்று குடிசையின் புறத்தேநின்று இக்குடிசையின் உள்ளே யிருப்பவர் யார் என்று அனுதாபக் குறியுடன் கேட்டனன். கேட்கவே சேற்றில் அமிழ்ந்து ஒளி மழுங்கிக்கிடந்த விலையுயர்ந்த மாணிக்கமொன்று வெளிக் கிளம்பினாற்போலத் தாரகைநடுவண் தண்மதி தோன்றினாற் போல்விளங்கும் முகத்தையுடைய ஓர் கற்புடைப் பெண்மணி வெளியேவந்தனள். அவளைத்தொடர்ந்து நான்கு சிறுவர்கள் முழுமதியைத் தொடர்ந்து செல்லும் நக்ஷத்திரங்களைப்போல கண்களில் தாரைதாரையாய் நீர்வார அழுதுகொண்டு வந்தனர். அம்மங்கையின் வதனமாகிய கமலம் இயற்கைக்கு மாறாய் மனக்கவலை யென்னும் வெப்பத்தால் உலர்ந்து கரிபொய்த்தான் கிழிருந்த மரம்போலக் கவின் வாடியிருந்தது. அப்பெண்மணி குதிரையின் அருகேநின்ற கருணைப் பெருக்கைக்கண்டு அச்சமும் பக்தியும் பெருகப்பணிந்து நின்றாள். அக் குழந்தைகள் ஆடையின்றி அழுக்கேறிய என்பு தோன்றிய உடம்பினராயிருந்தனர். அப்பெண்மணியின் இடையின்கண் கிழிந்த பழங்கந்தையொன்று அவளது கற்பைக் காத்துக்கொண்டிருந்தது. அருட்கடலாகிய அமைச்சர் அந்நங்கையின் முகத்தை யுற்றுநோக்கிச் சிறிது நேரம் செயலற்றுத் தமக்குள் ஆராய்ந்து நின்றனர். பின்னர் அம் மணீ! நீ யார்? ஏன் உன்முகம் வாட்டமுறுகின்றது? உன் குழந்தைகள் ஏன் அழுகிறார்கள்? நீ ஓர் கற்புடைத்தெய்வ மகளிரைப்போல் காணப்படுகிறாய். அப்படியிருந்தும் ஏன் இந்தப் பழங்கொட்டிலில் வசித்துவருகின்றனை? அதற்குக் காரணம் யாது?'' என்று வினவினர். அப்பெண்மணி, ஓ தேவரே! யானும் என் மக்களும் இக் குடிசையில் வாழ்ந்துவருவதற்கு யானே காரணமன்றி வேறு யாரும் காரணபூதராகார். யான் முற்பிறப்பிற்செய்த வினையின் பயனை இங்கிருந்து அனுபவிக்கின்றேன். வினை அனுபவித்துத் தீரவேண்டுவதாயினும் என்னுடைய இச்சிறு குழந்தைகளும் உணவின்றி வாடி வருந்துவதைக்காண என் மனவேதனையாகிய யானை என் அறிவாகிய அங்குசத்தை முறித்து வெளிப்போந்து பிளிறுகின்றதே! பேதையாகிய யான் என்செய்வேன்?'' என்று அறிவும் அடக்கமுந் தோன்றக்கூறிச்

சாம்பிநின்றனள். பசவேசர் "பெண்மணீ! நீயும் உன் குழந்தைகளும் ஏனிப்படி வருந்துகின்றீர்கள்? உன் கணவன் எங்கே? அவன் என்ன வேலைசெய்கிறான்? உங்கட்கு வேண்டியவைகளைத் தேடித் தருவதில்லையா? அவனுக்கு உங்கள்மேல் அன்பில்லையா? விவரமாகச் சொல்" என்றனர். அம்மங்கை பிரபுவே! "என் கணவர்க்கு எங்கள் மீதிருக்கும் அன்பிற்கோர் குறைவுமில்லை. எங்கட்கு வேண்டிய உணவு முதலியவற்றைத் தேடிக் கொடுக்கவேண்டுமென்னும் எண்ணம் அவருக்கு நிரம்பவுண்டு; அதற்காகவே அவர் பகல் முழுதும் வருந்தி வேலைசெய்கின்றனர்: நாள்தோறும் அதிகாலையில் வீட்டை விட்டுச்சென்று பகல்முழுதும் உணவுமின்றி வருந்தியுழைத்து மாலைப் பொழுதில்தான் திரும்புவர். ஆனாலோ அவர் வயிறுவது குழந்தைகள் வயிறுவது நாளும் நிரம்புவதில்லை. அந்தோ? அவர் என் செய்வார்: மதுபானம் என்னும் பேயால் பீடிக்கப்பட்டு விடுதலையடைய வழிதெரியாது வருந்துகின்றனர். அவரை விடுவிக்குந் தக்காரும் யாருமில்லை. அவர் வருந்தித்தேடும் கூலியனைத்தையும் மதுவென்னும் புனையெழில் பொது மகளிர்க்கே கொடுத்துவிடுகின்றனர். குலக் கொழுந்தாகிய குழந்தைகள் படுந்துன்பம் சகிக்கமுடியாதாயினும் புலைச்சியர் அகமனைய மதுக்கடை புகுதலை ஒழியார். அத்தீச்செயலொன்றும் அவர்பால் இல்லையேல் அவரினுஞ்சிறந்தார் யாருமில்லை. யானும் என் குழந்தைகளும் உண்ணவுணவும் உடுக்கவுடையுமின்றி இவ்வளவு துன்பத்தை அடையவேண்டியதில்லையே; எமது தீவினை அவரை அத்தீய வழியில் புகுத்துமேல் அவர்தான் யாது செய்வர்?" என்று கண்ணீர் ததும்பக் கலுழ்ந்து நின்றனள்; அம் மங்கையின் துயரத்தைக்கண்டு சகிக்காது வானமும் கவலைகூர்ந்து கண்ணீர விட்டாற்போல் மழைபெய்ய ஆரம்பித்தது. பசவேசரோ அருகிருந்த மரநிழலிற்றங்கிக் குடைபிடிக்கப்பட்டு நின்றார். அப் பெண்மணியும் குழந்தைகளுடன் குடிசைக்குள் சென்றாள். வானமோ கற்புடை மாதின் கவலைக்காற்றாது குமுறிக்குமுறி யழுது தன் கண்மழை சிந்திப் பெருக்கெடுக்கச் செய்தது. "நல்லோர் செய்யும் நன்மையும் தீவினையால் தீமையாய்முடியும், என்ற நீதிக்கிணங்க அவளது துயரத்தை மாற்றக்கருதியவாயு, குளிர்ந்த காற்றை வீசக் காற்றும் மழையும் கலந்துகொண்டமையால் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாமற் போயிற்று புறத்தேயிருந்த மாஞ்செடிகள் முறிந்து

விழுந்தன. எத்திசையினும் ஓவென்ற ஓசை மிகுந்தது. யாரும் தம்வயமிழந்து திகைத்திருந்தனர். சிறிதுநேரஞ் சென்ற பின்னர் ஆகூழால் அல்லவை ஒழிந்தாற்போல் காற்றும் மழையுந்தணிய, நமது வள்ளலின் மனம்போல் வானமுந்தூய்மையுற்றது.

பசவேசரது நோக்கமோ அந்த ஏழைக்குடிசையை நோக்கிய வண்ணமாயிருந்தது. குடிசையோ தலைகீழாய்விழுந்தது. உள்ளிருந்த மண்பாண்டங்களும் உடைந்தன. குழந்தைகள் மழையால் நனைந்து உடையின்றிக் குளிரால் நடுக்குற்றனர். தாயோ கண்ணையன்றித் தலையும் தண்ணீர்வாரப் பழந்துணியுமின்றிப் பரிதபித்து நின்றனள். அந்த ஏழை மக்களது குடும்ப நிலையைக்கண்டு வருந்திய பசவேசர் "ஆ தெய்வமே! படைப்பின் உண்மையைக் கண்டறிவதோ எளிதன்று! தெய்வமகளிரைப்போல் வனப்பும் வடிவும் பெற்றுவிளங்கி அரண்மனையில் தோழியர் பணிசெய்ய இன்பமனுபவிக்கத்தக்க இம் மங்கை இக்காட்டில் இக்குடிசையில் போற்றுவாரின்றி வருந்துவதைக் காணவோ என்னைப்படைத்தாய்? இந்த ஏழை மக்களைப்போல் பலர் வருந்திநிற்க யான்மாத்திரம் சுகமனுபவித்துக்கொண்டு ஏழைகளைக் காப்பாற்றத்தகுந்த முயற்சி செய்யாது வாளா இருப்பது எனக்கு அறமாமோ? கடவுள், ஒருவற்கு அறிவும் பொருளும் கொடுப்பது பிறர்க்குதவும் பொருட்டென்று கருதாது தனக்கென்றெண்ணுவது பேதமை. கடவுள் கொடுத்திருக்கும் பொருள் முதலியவற்றை ஏழைகளாகிய சகோதரர்களைக் காப்பாற்றும் வழியில் செலவிடுவதே தகுதியாகும்." என்றின்னன பல நினைந்து தன்னிடத்திருந்த ஆடைகளையும் பொருளையும் அந்த ஏழை மக்களிடம் கொடுத்துவிட்டுச் செல்வாராயினர்.

செல்லும்பொழுது வேறொன்றையுங் கருதாதவராகி அப்பெண்மணியின் நிலைமையையும், அதற்கான காரணத்தையும் உன்னியுன்னி முடிவாகத் தமது ஆட்சியில் மதுபானஞ் செய்வதை அறவே ஒழித்துவிடுவதே சிறந்த தருமம் எனத் தீர்மானித்தனர். அரண்மனைக்குச் சென்றவுடன் தம்பாலுள்ள மகா விரதிகளாகிய சங்கம மூர்த்திகளை அழைத்துக் கொல்லாமையைப் பற்றியும், மதுபானஞ் செய்யாமையைப்பற்றியும் ஊர்தோறுஞ் சென்று உபதேசம் செய்யும்படி அனுப்பி

வைத்தனர். ஆயினும் எவ்வளவு உபதேசம் செய்தபோதிலும் நாள் செல்லச்செல்ல பலர் மீண்டும் அத்தீய வழியில் புகுவர். மீண்டுங் கெட்ட வழியில் புகாதிருக்கும்படித் தடுப்பதற்கு ஓர் உபாயத்தை நாடினர். மக்களனைவரையும் கருணைக்கு நிலைக்களமாய ஓர் மதப்பற் றென்னுங் கயிற்றால் பிணித்துவிடவேண்டுமெனத் தீர்மானித்தனர். எக்காரணத்தை முன்னிட்டும் மறந்தும் உயிர்க்கொலையையும், மதுபா னத்தையும் புரியாத மதம் எது? மக்களுள் உயர்வு தாழ்வைக்கருதாது சமஸ்கார விசேடத்தால் அனைவரையும் தன்னகத்து ஏற்றுக்கொள் ளும் மதம் எது? உள்ளும் புறமும் நீக்கமற நிறைகின்ற இறைவனைக் காலத்திரயத்திலும் இடைவிடாது தானாகவே அருச்சித்துப் பேறு பெறும் மதம் யாது? என ஆராய்ந்து இத்தகைய குணங்கள் அனைத் தும் ஒருங்கே அமையப்பெற்று ஒப்புயர்வற்று விளங்கும் மதம் நமது வீரசைவ மதமாக இருக்கவேண்டுமெனத் தீர்மானித்து எல்லோருக் கும் அம்மத வுண்மையைப் போதித்து முதலில் இறைச்சியை உண் ணலாகாதென்றும், மதுபானஞ் செய்யலாகாதென்றும் வற்புறுத்தி நல்வழிப்படுத்தினர். இவ்விரண்டு கூடாவொழுக்கத்தைச் செய்தவர் எவரேனும் அம்மதத்திலிருக்க அனுமதியில்லையெனச் சட்ட நிரூபணஞ் செய்தனர். மேலுஞ் சிவதீக்ஷையில்லாதவருடன் யாரும் கலந் துண்ணலாகாதெனக் கட்டளையிட்டனர். இப்படி நமது வள்ளலார் கட்டளையிடாது விட்டிருப்பரேல், மதுபானஞ் செய்வதில்லையென்றும், உயிர்க்கொலை புரிவதில்லையென்றும் பலர்முன் உறுதிமொழி கூறிச் சிவதீக்ஷை பெற்றவரும் சிவதீக்ஷையில்லாதவருடன் சேர்ந்து உண்ணத் தொடங்கி முன்னர்விடுத்த மதுபானத்தையும் புலாலுண்ணலையும் மீண்டுங் கைக்கொண்டிருப்பார். இக்காலத்தில் அத்தகைய சட்ட நிரூபணமின்மையால் வீரசைவ மதத்தின் உண்மையை யுணர்ந்து சிவ லிங்கதாரண தீக்ஷை செய்துகொண்டனராயினும் சிலர் தாரண தீக்ஷை யில்லாதவருடன் உடனிருந்துண்ணப்பழைய வாசனையில் துணிகின் றனர். ஆகலால் மக்களனைவரையும் நல்வழிப்படுத்தக் கருதிய பெருநோக்கத்துடன் அநேகருக்குச் சிவதீக்ஷையைச் செய்வித்து வீர சைவ மதத்தில் சேர்த்துக்கொண்டனரே யன்றி மற்ற மதங்களை நிந் திக்கலாவது, கெடுதி விளைவிக்கவாவது கருதினாரில்லை.

அவரது அரசனான விச்சலமன்னன் ஜயின மதத்தினனாயினும் அவர்பால் அன்பும் மரியாதையும் உடையராய் அமைச்சுரிமைக்குரிய வேலையை அவன் மகிழுமாறு செய்துவந்தனர். அத்தேயத்தில் பெரும் பாலோர் மதுபான வெறியில்மூழ்கி ஏழை மக்களாய்விடுவதைத் தடுக்கக்கருதி அவர்களை மேலான நிலைமைக்குக் கொண்டுவருவதும், வேதாகமங்களின் உண்மைக்கருத்தை வெளியிட்டுக் கடவுளின் உண்மைக்கருத்துக்கிணங்கி யாவரையும் நல்வழியில் நடக்கச்செய்வதுமே பசவேசரது உண்மைக்கருத்தாக இருந்தது.

---

# அல்லமதேவர் வந்தருள் புரிதல்.

ஸ்ரீமத், உருத்திரசாமி ஐயர் அவர்கள்.

சங்கத்தலைவர், திருப்பாதிரிப்புலியூர்.

ஆன்மாக்கள் அனுபவிக்கும் போக இன்பத்தினையும் அடைய வேண்டி முத்தியின்பத்தினையும் அளிக்கவல்ல கருத்தாவாகிய அல்லம தேவன் மண்ணுலகத்தில் காமியபூசை இயற்றிய மாயையின் எண்ணத்தை நிறைவேற்றியருளவேண்டித் தனது உண்மைத் தன்மையை விடுத்து வேறொரு வடிவங்கொண்டான். தன் நெற்றிக்கண்ணினாலே நீறுபட்ட மன்மதனது தொழிலை இயற்றுதற்குத் தானே அவனது உருவந்தாங்கி வந்தனனோ என, கட்டழகுவாய்ந்த முகங்கள் ஆறனுள் சிறந்த ஒரு முகத்துடன் நின்ற முருகனோ என, தரையின்கண் சரிக்கும் சூரியனோ என, தாருகாவனத்து ரிஷி பத்தினிகளின் மனதில் மயல் விளைவிக்கக்கொண்ட பிக்ஷாடனர் திருவுருவம், இவ்வுருவம் கொள்ளுதற்குக் கற்றுப்பழகியதோ என, கண்டோர் வியந்து கூறும்படிப் பேரழகு, இளமை, காந்தி முதலியவற்றுடன் விளங்கினன் அல்லமன். கருத்த மயிரொழுங்குடன் ஒளிரும் முகமண்டலம் நடுவிலுள்ள களங்கம் ஓரத்தின்கண் உற்றுச்சூழ்ந்து விளங்கும் சந்திரனைப்போல் பொலிய, கொப்பூழினின்றும் மேற்போய் மார்பிடைப் பரந்துள்ள கருமயிரானது கருநிறந்தாங்கிய தாமரைபோல் விளங்க, அரையை விலம்தித்ப்

பிலா ஆடை அலங்கரிக்க, மேனியில் கஸ்தூரியாதி வாசனைப்பொருள் கள் கலந்த கலவைச்சாந்து காததூரம் வாசனைவீச, பெய்தலைச் செய் யும் கரிய மேகம்போல் மிக்க கருமைவாய்ந்த சரிந்த கூந்தலின் *சிகழி தேமாங்குயில் முகம் போல் அழகு செய்ய, அச்சிகழியின்மேல் வெள் ளிய தேன் நிறைந்த பூமாலை சூழ்ந்து விளங்க, வெள்ளிய சொற்களின் தெளிபொருள்போல் வெளியே குடுமி தோன்ற, மேல் தலைப்பாகை சிறக்க, கலைவல்லார் கருத்திற் கரியதாய்ச் சிறியனேன் புன் தலைக்கு எளியதாய் உள்ள பொற்றாளையுடைய அல்லமன் வந்தனன். இன்னும் கண்டத்தில் இருப்பின் உண்மை வெளிப்படுமே என விஷத்தை நெற்றியிலே வைத்திருத்தல் போல் நெற்றியின்கண் கரும் பொட் டிட்டு, சந்திரன் பால் உரோகணி வீற்றிருத்தல் போல் சந்திரன் போன்ற முகத்தினருகே செவியில் உரோகணிபோல் பிரகாசிக்கும் காதணி அணிந்து, முத்தாரங்கள், வீரசங்கிலி, வாகுவலயம், இரத்தின மோதிரம், முதலிய ஆபரணங்களை அழகு எனும் நெருப்பில் பெய்யும் நெய் போல பல உறுப்புக்களில் அழகு சிறக்க அணிந்து, இந்திர போகத்தை அனுபவிக்கத்தக்க உறுப்பிலக்கணம் முழுதும் அமையப் பெற்ற இந்தச் சுந்தர புருஷன் இதனைச் சுமப்பது! என்ன பாபம்! என்ன பாபம்! என்று பார்ப்பவர் மனம் பதைக்க நிந்தையிலாத தன் முதுகில் மத்தளம் ஒன்றைத் தாங்கிக்கொண்டு மதுகைநாதன் கோயில் வாயிலை நண்ணினன். மேரு போன்று உயர்ந்துள கோபுரத்தருகே சென்று மத்தளத்தை முழக்கினன். நந்தி மத்தளம் கொட்ட மன்றுள் ஆடிய ஆனந்தக் கூத்தனே மத்தளத் தொழிலைக் கைக்கொண்டான் என்று கண்டவர் உளம் மருண்டனர். உரல் அசையாது அடுக்கி உறி யில் வெண்ணெய் எடுத்து அயின்ற கண்ணன் ஊதிய குழல் போன்ற மொழியையுடைய மாதர் புந்தி மாழ்கினர். சிறகுகள் அசைய தேகம் அசையாது நிற்கும் ‡சிரல் பறவைபோல் தன் விரல்கள் அசைய அதிர்த்தனனே அன்றித் தன் சரீரம் அசையாமல் நின்றான்.

அமலனாகிய சச்சிதானந்த சூரியனது கரத்தினால் அடிக்கப்பட்ட மத்தள ஓசையாகிய மேக முழக்கத்தை அம்மண்டபத்தில் நடித்துக் கொண்டிருக்கிற மாயையாகிய மயில் கேட்டு இப்பூவுலகத்து மனிதர் கையினால் முழக்கக் கேட்டிராத புதிய ஒலி இது என்று உளம் வியந்

* சிகழி = மயிர் முடி. ‡ மீன் குத்திப் பறவை.

தாள். அருகே நின்ற சேடியர்களை நோக்கி "பசுந்தனங்களையுடைய பெண்களே! இத்தகைய மத்தள முழக்கம் இதுகாறும் காதினற் கேட்டிலம். இதுபோல் உண்டென்று உரைப்பவும் கேட்டிலம். உலக மெல்லாம் விரும்பி நின்று கேட்டு வியக்கத்தக்க இந்த வித்தை கற்றுத் தன் திறத்தைக் காண்பித்தவன் யாவன்? அறிந்து வாருங்கள்", என்று உரைத்தாள். அயல்நின்ற மாதர் மிக வேகமாகச்சென்று மத்தளம் முழக்காநின்ற சோதியாகிய அல்லமனை, தாங்கள் முற்பிறப்பில் செய்த பெருந்தவத்தின் பயனைக் கண்டு மாயையின் பக்கல் வந்து "அம்மே! அவன் காட்டிய வித்தை போன்று அவனது அழகும் மிக அருமையாக இருக்கிறது. கருப்பு வில்லை யுடைய மன்மதனே இவ்வுருவெடுத்து வந்தனனோ எனப்பேரழகுடன் விளங்குகிறான்" என்று கூறக்கேட்ட மாயை "அன்னவனை யழைமின்"; என்றாள். அவர்களும் அம்மத்தளி கனை அருகில் கொண்டுசேர்த்தனர். அங்கு எதிரில் நின்ற அல்லம நாமப்பெயர் வாய்ந்த அண்ணலை மாயை நோக்கினள். மயக்கங் கொண்டனள். செந்நிலத்தில் விழும் நன்னீரும் செந்நிறம் அடைவது போல் அவ்வல்லமன் மயமாய் ஆயினள். பொன்னினற் செய்த பாவைபோல் செயலற்று நின்றாள். இதனை அறிந்த மன்மதனும் பாணங்களைத்தூவிக் கையிளைத்து அருகே நின்றான். மாயை பிறரை மயக்கும் என்பதுபோய்த் தான் மயங்கி நிற்பதை அயல் நின்ற மாதர் அறிந்தார்கள். "வீரமன்மதனைப் போன்றலதன! நின்தேயம் யாது? நின் நாமம் யாது? எங்கு விரும்பி வசிப்பாய்?" என்று வினவினர் அப்பெண்கள். "மேகத்தை நிகர்த்த கூந்தலையுடைய பெண்காள்! எனது தேயம் இதற்கு அந்நியமான தேயம் (மேலான தேயம்). தாம் சமர்த்தர் என்று சபதங்கொண்டு வந்தவர்வலி நிலையல்ல என்னும் அல்லமன் என் பெயர். அன்பு செய்பவர்பால் பற்று இலாமல் கலந்து வசிப்பேன்" என்று விடைபகர்ந்தனன்; பொய்மை இல்லாதவனாகிய அல்லமதேவன். இதனைக்கேட்ட அமுதம்போன்ற பெண்கள் "எங்கள் தலைவியாகிய மாயை உலகத்திலுள்ள எல்லா வித்தைகளிலும் வல்ல வள். கற்றோர் பலர் அவளுடன் உறைவர், நீயும் புறம் போகாது அவ்வித்தை கற்றோரோடு பொருந்திச் செல்வமாக இருப்பாய்" என் றார். தன் கொவ்வைக் கனிபோன்ற வாய்திறந்து உணர்த்த வேண் டியவைகளையெல்லாம் அப்பெண்களே கூறிவிட்டார்கள் என்று மிக வும் சந்தோஷித்து, இச்செய்கை மதுகை நாதனைப் பூசித்த பேறு

என்று அறிந்து, ஒன்றும் பேசாமல் இருந்தாள் மாயை. அடைப்பத் தொழில் பூண்ட போகி என்னும் பணிப்பெண், மோகினி தவத்தால் பெற்ற மாயையின் கரத்தில் தாம்பூலத்தை அளித்துச் சிறந்த போகி போல் நடித்துநின்ற யோகியாகிய மத்தளிகன் கையில் கொடுப்பித் துப் பின்னும் வேண்டுவன நன்கு செய்தாள்.

தனது பாததாமரைகளை வணங்கி வழிபடும் அன்பர் கருதிய வாறே கொடுக்கவல்ல பரமனாகிய கருணாமூர்த்தி, தான் மேற்கொண்ட கோலத்திற்கேற்ப நடிப்பவன் ஆதலாலே வேல்போல விசாலித்து விளங்கும் கண்களையுடைய மாயை எடுத்து உதவிய பாகு வெள்ளிலை களை இழிந்தவன் ஏற்பதுபோல் வணங்கி வஸ்திரங்களில் ஏற்றான்.

மாயை பின்பு விருஷபக் கொடியையுடைய விமலன்பால் விடை பெற்றுப் புறம்போந்தாள். மன்மத பாணங்களினால் புண்பட்டு வருந் திச்செல்ல ஆற்றாதவளாகிச் சிவிகையின்கண் பெண்கள்சூழ வீதியிற் சென்றாள். பிதாவாகிய மமகாரன் அரண்மனையை நண்ணினாள். இன்று வந்த மத்தளிகனாகிய அல்லமனது ஆற்றலைப் பிதாவிற்கு வியந்து எடுத்துரைத்து அவன்பால் வித்தை கற்கவேண்டியதற்காக அவனுடன் வசிப்பதற்கும் தந்தையின் அனுமதிபெற்றுத் தன் கன் னிகாமாடம் புகுந்தாள். தாமரைத் தடாகத்தில் பல வலம்புரிச் சங் கங்கள் தன்னைச் சூழச் சலஞ்சலம் இருப்பதுபோல் பொன்மயமாகிய மண்டபத்தில் பொன் குழைகள் அணிந்து மகளிர் பலர்சூழப் பூந் தவிசில் இருந்து தண்ணுமை வித்தையின் திறத்தை அறிவதுபோல் அல்லமனோடு வார்த்தைசொல விரும்பினாள். அங்ஙனம் தலைப்பட்ட மாயையின் நினைவு முற்றும் அல்லமன் கலவித் தொழிலில் புகுந்து நின்றது; கண்கள் அவனது மேனி அழகின்கண் திளைத்து நின்றன; அவளது நாவோ வெறுமையான உரைகளைச் சொல்லிக்கொண்டிருந் தது. இதனால் அன்றோ மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் ஒற்றித்து நின்ற பெண்கள் அரியர் என்றார் நூல் வல்லோர். குற்றம் அற்ற நல்லவேழக் கரும்பினிடத்து உள்ள இரசத்தைவிட்டுக் கோதா கிய சக்கையை விரும்புவோர் போலவும், புழுகுபூனையின்பால் தோன் றும் உயர்ந்த மதமாகிய புழுகைவிட்டு அதன் மலத்தைக் கொள்வோர் போலவும், சென்றடையாத் திருவுடையானாகிய அல்லமன்பால் மெய்

யாகிய முத்தியின்பத்தை விரும்பாது அற்பமாகிய போகவின்பத்தை இச்சித்தாள். கிடை, கொல்லுதல் ஆகிய தொழில்களைச் செய்யும் முல்லை, நீலோற்பலம் என்னும் இரண்டு பாணங்களை எல்லாம் மாயையின்பால் விட்டனன் மன்மதன். கோமகளும் அதனைப் பொருளாகி மின்னலின் திரட்சிபோல் விளங்கும் விமலனாகிய அல்லமன்மேற் சாய்ந்து வீழ்வாள். பெண்கள் தன்னைச் சூழ்ந்து நிற்றலால் நாணி நின்றாள். மாந்தளிர் போன்ற மிருதுத்தன்மை பொருந்திய மாயை காமத்தீயினால் உலர்ந்துவாடித் தன் மனதை ஒத்த சில பெண்களுடன் உள்ளிடத்திற்குச் சென்றாள்.

வண்டுகள் மொய்க்கின்ற மலர் தரித்த கூந்தல் சோரவும், அழகிய தனத்தில் மேல்பொருந்திய கலைவிலகவும், நல்வளப்பம் பொருந்திய பஞ்சணையின்மீது வாயினால் காற்று எழுப்பிக்கொண்டு வீழ்ந்தாள்.

(தொடரும்)

---

# தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

## 1. பேரூர். ஸ்ரீ சாந்தலிங்கசுவாமிகள் மடாலயமும், சத்வித்யா சன்மார்க்க சங்கமும்.

இந்த மடாலயம் கோயமுத்தூரையடுத்த மேலைச்சிதம்பரம் என்னும் பேரூரின்கண் காஞ்சிமா நதிக்கரையிலுள்ளது. இதன்கண் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளின் சமாதிநிலையமிருக்கின்றது. சாந்தலிங்க சுவாமிகள் நடுநாட்டில் வீரசைவமரபில் அவதரித்தவர்; இளமையில் கலைகளனைத்தும் பயின்று துறையூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றவர்; விருத்தாசலம் ஸ்ரீ குமாரதேவருக்கு ஞானோபதேசம் புரிந்தவர்; துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளிடம் அன்புகொண்டு அவரது தங்கையாராகிய ஞானம்பிகையாரை மணந்து அவரைப் பொம்மயபாளையம் ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகரிடம் ஆற்றுப்படுத்திப் பாடச்செய்வித்தவர்; தமிழ்நாடு உய்வான்

வேண்டிக் கோலைமறுத்தல், வைராக்கியதீபம், வைராக்கியசதகம், அவிரோதவுந்தியார் என்னும் நான்கு ஞான நூல்களையும் அருளிச்செய்தவர்; தாம் மனைவியோடிருத்தலைக்கண்டு ஐயுற்ற மாணவர்கட்கு உமா சகிதராகக் காட்சிகொடுத்து இறைவரார்தன்மையை விளக்கியவர். இத்தகைய பெரியாராகிய சாந்தலிங்க சுவாமிகளுடைய சந்நிதானம் அப்பெருமானுடைய அருளால் இலிங்கதாரணஞ் செய்யப்பெற்றுப் பரிபாலித்துவருகிற ஸ்ரீமத் மாணிக்கசுவாமிகளுடைய பெருமுயற்சியாலும், பேரன்பாலும் திருப்பணி செய்யப்பெற்றுக் கண்டார் கருத்தையுருக்கி அன்பர் ஆக்குந்தன்மையில் பொலிந்து விளங்குகின்றது. வருடந்தோறும் மாசிமகத்தில் சாந்தலிங்க சுவாமிகளுடைய குருபூசையும், அதன் சார்பாகச் சத்வித்தியா சன்மார்க்க சங்கமும் சிறப்பாக நடைபெறுகின்றன. இச்சங்கம் புலிசை ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள் முதலிய பெரியார் பலரைத் தலைவராகக்கொண்டு அவர் செய்த வுபதேசமொழியால் கொங்கர் நாடனைத்தும் சைவமணங்கமழும்படி விளக்கமுறச் செய்திருக்கின்றது. இவ்வாண்டில் . 13, 14, 15—3—1930) இம்மூன்று தினங்களிலும் -வது ஆண்டுவிழா கோயமுத்தூர் வழக்கறிஞர் திருவாளர் C. K. சுப்பிரமணியமுதலியார் B. A., B. L., அவர்கள் தலைமைவகிக்க, பல அறிஞர்கள் பேருரை நிகழ்த்தச் சிறப்பாக நடைபெற்றது. மடாயைத்தின்கண் ஸ்ரீ சாந்தலிங்கசுவாமிகளைத்தரிசித்து அவரது பிரசாதமாகிய நல்லுணவையுண்டு சத்வித்தியா சன்மார்க்கசங்க மண்டபத்தையடைந்து அறிஞர்செய்யும் உபதேசமொழிகளைக் கேட்டுப் பலரும் உய்யும்படிச்செய்கின்ற ஸ்ரீமத் மாணிக்கசுவாமியினுடைய செயலும், அவர்களை அத்துறவற நிலையில்நின்று உதவும்படிச்செய்த திருவையாறு அறுபத்துமூவர் மடாலயத்தின் தலைவர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளுடைய பேரன்பும் மடாதிபதிகள் தம் கடமை யின்னதெனவுணர்ந்து உபகரிக்க எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அன்புடையார் கண்டு தரிசித்து இன்பமெய்துக. இச்சங்கம் பொதுவகையில் சன்மார்க்க உபதேசம் புரிவதுடன் இடத்திற்கேற்பச் சிறப்புவகையால் வீரசைவ சமயாசாரஞானோபதேசங்களைப் புரிவித்துப் பலரையும் நல்வழிப்படுத்துமாறு ஸ்ரீ சாந்தலிங்கசுவாமிகளின் பேரருள் முன்னின்றுதவுவதாகுக.

---

## 2. பாலகெந்தருவ, G. M. நடராஜய்யாவின் சங்கீதக் கச்சேரி.

16—3—30ல் பெருவளநல்லூர் லால்குடி தாலூகாபோர்டு பிரசிடெண்டு திருவாளர் பா. கிருஷ்ணசாமி ரெட்டியாரவர்கள் திருமிகு செல்வனுக்கும், தொட்டியம் மின்னும்பள்ளி ஜமீன்தாரும், திருச்சிஜில்லா உபதலைவருமாகிய திருவாளர் முத்துவேங்கடாசல ரெட்டியார் அவர்கள் திருமிகு செல்விக்கும் நடந்த திருமணத்தில் கொள்ளேகாலம் தாலூகாபோர்டு பிரசிடெண்டு G. P. மல்லப்பா அவர்கள் திருமிகு செல்வன் 16-வயதுள்ள பாலகந்தருவ G. M. நடராஜய்யாவின் சங்கீதக்கச்சேரி நடைபெற்றது. பல ஜமீன்தார் களுடைய இடையில் நடந்த இளைஞரது சங்கீதக்கச்சேரியும், செல்வர் முதல் ஏழைகள் வரை எண்ணிறந்தோர்க்குதவிய அன்னதானமும் அத்திருமணத்தைப் பெருமணமாக எங்கும் மணக்கச் செய்வித்தன. சுபம்!

---

## 3. பொம்மயபாளையம் மடாலயமும் உபகாரத் திருமணமும்.

20-3-30ல் புதுச்சேரியையடுத்த பொம்மயபாளையம் வீரசைவ மடாலயத்தின்கண் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால் ஏழு திருமணங்கள் நடைபெற்றன. அவற்றுள் மடாலயத்தின் சீடர்க ளாகிய பக்தர்களில் ஆறுமணமகனையும் ஆறுமணமகளையுந் தேர்ந் தெடுத்துப் பெற்றோர்கட்கு யாதொரு செலவுமின்றி உண்டிமுதலியன வுதவி வீரசைவாகமப்படித் திருமணஞ் செய்வித்த பேருபகாரம் பாராட்டத்தக்கது. இந்நிகழ்ச்சி இத்தகைய உபகாரமாகிய திருமண முதலியவற்றை வருடந்தோறும் மடாலயங்களாகிய அறநிலைகளில் நடத்திவைத்தலே அறநிலையைப் புரந்தருவாரின் அருட்செயல் என் பதை யாவர்க்கும் ஞாபகப்படுத்துகின்றது. இத்தகைய அறங்கள் ஆங்காங்கு நின்று நிலவுக.

## 4. பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்தின் இருபதாவதாண்டுவிழா.

திருவருட்செயலால் இச்சங்கத்தின் 20-வது ஆண்டுவிழா 30, 31—3—30ல் சென்னை சித்தாந்தம் ஆசிரியரும், சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் காரியதரிசியுமான சைவத்திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L., M. L. C. அவர்கள் தலைமையில் பல அறிஞர் சொற்பொழிவு நிகழ்த்த சிவாலயத்தின்கண் செவ்வனே நடைபெற்றது. தலைவர் முன்னுரையாகக் குறைந்தவர்களை உயர்த்த முயற்சித்தலே செயற்கருஞ் செயலென்றும், சமயத்தைப் பெருக்குதற்குப் பாஷையையும், கூட்டத்தையும் பெருக்கல் அவசியமெனவும், வேறு மதத்திற்குச் செல்வோரைக் காரணமறிந்து தடுத்தல் வேண்டுமெனவும், சர்க்கசில் இயற்கையில் வேறுபட்ட சிலமிருகங்கள் ஒற்றுமைப்பட்டிருத்தல்போல, வெளிப்படையான நாடகக் கூட்டத்தில் ஒழுக்கத்தின் உயர்வு தாழ்வு கருதாது ஒருங்கேயுண்ணுதல் மாத்திரம் ஒற்றுமையாகாதெனவும், தீக்ஷை முதலியவற்றால் ஒழுக்கத்தின் மேம்படச்செய்து பலரையும் தம் சமயத்தினராகச் செய்தலே சமயப்பணியெனவும் சைவசமயிகளின் கடமை இன்னதென விளக்கிப் பேசினார்கள். ஏனைய சொற்பொழிவாளர்கள் கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஏற்புடையனவாகவேயிருந்தன. சுபம்.

---

## 5. ஸ்ரீ ஜகத்குரு பண்டிதாராத்தியர், விஸ்வாராத்தியர் ஜயந்தி மகோற்சவம், [நாமகிரிப்பேட்டை.]

சேலம் ஜில்லா, இராசிபுரம் தாலூகா, நாமகிரிப்பேட்டைக் கடைத்தெருவில் ஸ்ரீரம்பையயர் மாடிவீட்டின்கண் அமைத்துள்ள ஸ்ரீ பஞ்சாசாரியர் பஜனை நிலயத்தில் 26–2–30உ இரவு ஸ்ரீபஞ்சாசாரிய கலசப்பிரதிஷ்டை, ருத்திராபிஷேகம் முதலிய உபசாரபூசை நடந்து, மறுநாள் காலை கணாராதனையும், மாலை குருவைபவ உபந்நியாச

மும் நடைபெற்றன. வெள்ளிக்கிழமை காலையில் 30 சிறுவர்கட்கு விதிப்படி தீக்ஷையும், மாலை உபந்நியாசம் முடிந்தவுடன் புஷ்பாலங்கார விமானத்தில் ஸ்ரீஜகதாசாரியர்களின் உருவப்படத்தை எழுந்தருளச் செய்து பஜனை கோஷ்டிகளுடனும், பாண்டு முதலிய வாத்தியக் கோஷங்களுடனும் ஜயகோஷத்துடனும் செய்வித்த திருவுலாக் காட்சியும் சிறப்பாக நடைபெற்றன. இராஜவீதிகளின் வழியாக உற்சவம் நடைபெறும்போது எல்லா மதத்தினர்களும் வேறுபாடின்றி நிவேதன முதலியவை செய்தா குருகிருபைக்குப் பாத்திரரானமை மிகவும் பாராட்டற்பாலது.

---

## 6. ஸ்ரீஜகத்குரு இரேணுகாசாரியர் ஜயந்தி மகோற்சவம், (சேலம் ஸ்தலமலை).

சேலத்தை அடுத்த ஸ்தலமலை யென்னும் அரியமலையின் மீது, அருந்தவர்க் குறையுளாகிய குகாச்சிரமும், தளிகை மடமும் இவற்றினிடையே கருங்கற் பாறையிற் செதுக்கப்பட்ட அகத்திய மகரிஷிக்கு உபதேசிக்கும் அவசரமாக அமைந்துள்ள ஸ்ரீ ஜகத்குரு இரேணுகாசாரியர் திருவுருவமும் அடங்கிய அகத்திய ஆச்சிரமத்தின்கண் 13–3–1930ல் காலை ருத்திராபிஷேக சகிதமான விசேஷ பூஜையும், சுணாராதனையும், மாலை ஸ்ரீ இரேணுகாசாரியரின் பிரபாவ உபந்நியாசமும் நடைபெற்றன. பலருந் தரிசித்து ஆசாரிய கிருபைக்குப் பாத்திரரானார்கள். இந்த நூதன ஆலயப் பிரதிஷ்டையும், ஸ்ரீஇரேணுகாசாரிய ஜயந்தி மகோற்சவமும் தமது சொந்த பொருட்செலவில் நடாத்திய சேலம் குகை, வைத்தியம் சே. குருசாமி ஐயா அவர்களின் குருபக்திக்கு ஜகதாசாரியரது பூரண கிருபையுண்டாகுக.

ஓர் பிரத்தியக்ஷ தரிசி.

---

# ஓர் வேண்டுகோள்.

வீரசைவசமயாபிமான மிக்க பெரியோர்களே!

இத்தமிழ்நாட்டின் சோழமண்டலத்தின்கண் சிறந்த நகரமாக விளங்கும் கும்பகோணத்தின்கண் பன்னிரண்டு வருஷகாலத்திற்கொரு முறை மகாமக தீர்த்தமாடி ஸ்ரீகும்பேசுவரர் அருளைப்பெறுதற்குப் பற்பலநாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்களும், அரசர்களும், முனிவர்களும், மடாதிபதிகளும் விஜயம் செய்யும் வழக்கம் யாவரும் அறிவர். அந்த மகாமகத் தீர்த்தக் கரையிலுள்ளது காசிவிஸ்வநாதராலயம், அதற்குப் பக்கத்திலுள்ளது ஸ்ரீவீரபத்திரசுவாமியாலயம், அதனையடுத்து விளங்குவது வீரசிங்காதனகர்த்தராகிய ஸ்ரீசாரங்கதேவசுவாமிகள் பெரியமடம் என்னும் வீரசைவமடம். இந்த வீரசைவமடமே தமிழ்நாட்டிலுள்ள மடங்கள் எல்லாவற்றிலும் பழமையும் உயர்வும் வாய்ந்தது. திருநெல்வேலிஜில்லா முதல் திருவிதாங்கூர் சமஸ்தானம்வரை ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பண்டாரத்தார்களாகிய யாங்கள் அந்தமடாலயத்தின் சிஷ்யர்களாக இருக்கின்றோம். இருந்தும் பயனென்ன? எங்கள் குருமூர்த்தியாகிய சுவாமிகளைத் தரிசிக்கும் பாக்கியமில்லாதவர்களாய் இருக்கின்றோம். குருப்பிரசாத மில்லையேல் எவ்வளவு செல்வாக்கிருந்தும் அதனால் யாதுபயன்? சுமார் 35—வருடமாகஷை கும்பகோணம்பெரியமடத்தில் ஆதீனகர்த்தராகிய குருமூர்த்தி சுவாமிகள் இல்லாதிருக்குங் குறையே எங்கட்குப் பெருங்குறையாயிருக்கின்றது. பலவருஷங்களாக சுவாமிகள் சஞ்சாரஞ்செய்து தரிசனங் கொடுக்காததினாலேயே எம்மவர்களில் பலர் வீரசைவ மதாசாரத்தை இழந்து நிற்கின்றனர். யான் சுமார் 10 வயதளவாயிருக்கும்போது ஸ்ரீமத் பசவலிங்க சாரங்க தேசிகேந்திர சுவாமிகளால் தாரண தீக்ஷை பெற்றுக்கொண்டேன். எனக்குப்பின் பிறந்தோர்களெல்லாம் ஆசாரிய மூர்த்திகளைத் தரிசிக்கப் பெறுமையால் தீக்ஷை முதலியன செய்துகொள்ளாமல் மதாபிமானத்தைக் கடந்து நிற்கின்றனர். தீக்ஷை பெற்றிருந்தவர்களும் சமயாசாரத்தை விடுத்திருக்கின்றனர். அன்னிய மதத்தினர்களிடம் யாங்கள் வீரசைவ சமயத்தைச் சார்ந்தவர்களென்றும், எங்கள் ஆசாரிய சுவாமிகள் கும்பகோணத்தில் இருக்...ர்களென்றும் சொல்லிக்கொள்ளவும் நாணமடைகின்றோம். இந்த

மடாலயத்திற்கு வடநாட்டிலிருந்து சுவாமிகள் பட்டந்தரித்து வருவது வழக்கமென்கிறார்கள். அன்றியும் வடநாட்டில் ஸ்ரீ பஞ்சாசாரிய பீடங்களும், சித்திரகல்துருவம் ஸ்ரீமத் ஜகத்குரு ஜயதேவ முருக ராஜேந்திர சுவாமிகள் மடாலயமும் நல்ல நிலைமையில் இருக்கின்றன எனவும் கேள்வியுறுகின்றோம். இத்தமிழ்நாட்டிலும் தமிழ், தெலுங்கு கன்னடம் பேசத்தக்க வீரசைவ மடாதிபதிகள் இருக்கின்றார்களெனச் சொல்லுகிறார்கள். இருந்தென்ன பயன்? தம்மைத் தாமே பெரியர் என்று மதித்துத் தமக்குள் ஒற்றுமையின்றி பெரியமடத்தின் ஜீரணோத்தாரணத்தைக் கவனிக்காதிருக்கின்றனர் போலும். இதுவரை வீரசைவ தருமம், தம்மைத் தாமே மதித்துக்கொண்டிருக்கும் மடாதிபதிகளும் வீரசைவ மாகேஸ்வரர்களும் தங்கள் மதத்தை அன்னிய மதப்பிரவேசமென்னும் பெருந்தீப்பிடித்து எரிந்துகொண்டு வருவதை அறியாதிருக்கின்றார்களே! முற்காலத்திய பெரியவர்கள் இப்படியிருந்திருப்பரேல் இந்த மதம் இவ்வளவு தூரம் பரவியிருக்க முடியுமா? திருச்சி ஸ்ரீ பசவண்ண செட்டியாரவர்கள் ஷை மடாலயத்தின் காரியஸ்தராக இருக்கிறார்கள். இருந்தென்ன? வீரசிங்காதன மடம் குருமூர்த்தியில்லாமல் சூனியசிங்காதன மடமாக இருக்கிறது. இனிக் கூடும் மகாசங்கத்தில் ஓர் கமிட்டியொன்று ஏற்படுத்தி மடாலயச் சீர்திருத்தங்களைக் கவனிக்க முயற்சித்தல் வேண்டும். இங்ஙனம் முயற்சித்து யாங்கள் குருநாதரைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறும்படி வீரசைவச் சமூகத்தார் முன் வருவார்களென அவரது பேரருளை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

பிச்சாண்டி பண்டாரம்.

# வீரசைவ சித்தாந்த பஞ்சாங்கம்.

## பிரமோதூதவூ சித்திரைமீ 1930–ஏப்பிரல், மே.

| | ஆங்கிலம் | தமிழ் | வாரம் | திதி | | நக்ஷத்திரம் | | யோகம் | | கரணம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ம. நி | | ம. நி. | | நா. வி. | | |
| | 13 | க | ஞாயிறு | பௌ | 11-56 | சித் | 11-51 | அரி | 42-31 | ங்ப | 43-31 |
| | 14 | உ | திங்கள் | பிர | 11-02 | சுவா | 11-52 | வ[illegible]சி | 38-[illegible]0 | தை | 41-52 |
| | 15 | ௩ | செவ் | துதி | 10-36 | விசா | 12-23 | சித் | 35-22 | வ | 41-26 |
| | 16 | ௪ | புதன் | திரி | 10-41 | அனு | 1-25 | விய | 33-17 | பவ | 42-17 |
| | 17 | ௫ | வியா | சது | 11-16 | கேட் | 2-53 | வரி | 32-10 | கவு | 44-23 |
| | 18 | ௬ | வெள்ளி | பஞ் | 12-20 | மூல | 4-49 | பரி | 31-56 | கர | 47-36 |
| | 19 | எ | சனி | சஷ் | 1-50 | பூரா | ... | சிவ | 32-30 | வி | 50-45 |
| ஏப்பிரல்மீ | 20 | அ | ஞாயிறு | சப் | 3-38 | பூரா | 7-07 | சித் | 33-37 | பா | 56-28 |
| | 21 | கூ | திங்கள் | அஷ் | 5-35 | உத் | 9-36 | சாத் | 35-03 | கவு | 28-56 |
| | 22 | க0 | செவ் | நவ | 7-35 | திரு | 12-11 | சுப | 36-30 | தை | 1-26 |
| | 23 | கக | புதன் | தச | 9-26 | அவி | 2-39 | சுப் | 37-41 | வ | 6-16 |
| | 24 | கஉ | வியா | ஏகா | 11-02 | சத | 4-54 | பிரா | 38-22 | பவ | 10-36 |
| | 25 | க௩ | வெள்ளி | துவா | 12-14 | பூர | 6-48 | மா | 38-17 | கவு | 14-07 |
| | 26 | க௪ | சனி | திர | 12-59 | உத் | 8-16 | வை | 37-21 | கர | 16-34 |
| | 27 | க௫ | ஞாயிறு | சது | 1-12 | ரேவ | 9-14 | விஷ் | 35-25 | வி | 17-48 |
| | 28 | க௬ | திங்கள் | அமா | 12-56 | அச் | 9-44 | பிரீ | 32-30 | சது | 17-46 |
| | 29 | கஎ | செவ் | பிர | 12-11 | பரணீ | 9-45 | ஆயு | 28-39 | கிம் | 16-29 |
| | 30 | கஅ | புதன் | துதி | 10-58 | கார் | 9-19 | சௌ | 23-52 | பா | 14-02 |
| | 1 | ககூ | வியா | திரி | 9-21 | ரோ | 8-29 | சோ | 18-16 | தை | 10-32 |
| | 2 | உ0 | வெள்ளி | சது | 7-27 | மிரு | 7-21 | அதி | 11-58 | வி | 6-09 |
| | 3 | உக | சனி | பஞ் | 5-19 | திருவா | 5-58 | சுக | 5-09 | பவ | 1-07 |
| | 4 | உஉ | ஞாயிறு | சஷ் | 3-01 | புனர் | 4-26 | சூல | 50-20 | கர | 49-42 |
| | 5 | உ௩ | திங்கள் | சப் | 12-36 | பூச | 2-49 | கண் | 42-42 | வி | 43-40 |
| மேமீ | 6 | உ௪ | செவ் | அஷ் | 10-11 | ஆயி | 1-10 | விரு | 35-09 | பா | 37-42 |
| | 7 | உ௫ | புதன் | நவ | 7-49 | மக | 11-37 | துரு | 27-49 | தை | 32- 0 |
| | | | | தச | 5-37 | | | | | | |
| | 8 | உ௬ | வியா | ஏகா | 3-35 | பூர | 10-13 | வியா | 20-48 | வ | 26-43 |
| | 9 | உஎ | வெள்ளி | துவா | 1-53 | உத்ர | 9- 0 | அரி | 14-15 | பவ | 22-05 |
| | 10 | உஅ | சனி | திர | 12-32 | அத்த | 8-09 | வச் | 8-23 | கவு | 18-17 |
| | | | | சது | 11-37 | சித் | 7-38 | சித் | 3-12 | கர | 15-26 |
| | 11 | உகூ | ஞாயிறு | | | | | விய | 58-57 | | |
| | 12 | ௩0 | திங்கள் | பௌ | 11-09 | சுவா | 7-35 | வரி | 55-42 | வி | 13-13 |
| | 13 | ௩க | செவ் | பிர | 11-10 | விசா | 7-58 | பரி | 53-25 | பா | 13-10 |

சித்திரைமீ
வருடப்பிறப்பு
கரிநாள்
சர் அபிஷேகம்
பைஞ்ஞீலி
ர் கட்டமுது

11 சுந்தரர் குருபூசை
12 ஏகாதசி
14 பிரதோஷம்
15 கரிநாள்
16 அமாவாசை
18 கார்த்திகை

22 ஷஷ்டி விரதம்
25 அக்கினி நக்ஷத்திர ஆரம்பம்
26 ஏகாதசி
28 பிரதோஷம்
30 சித்ரா பௌர்ணமி

திருவாளர், முர்த்துசாமி உபாத்தியாயர் அவர்கள், பசும்பலூர்.

## வெண்பா.

1. தேவர்க் கமுதாந் திருமாற் கொருசுவையாந்
தூலற் கொருதள மாஞ்சொல்லில்—நாவிற்குப்
பஞ்சாக் கரமாம் பகர்வீர சைவமலர்
எஞ்சாது கொள்வீ ரிசைந்து.

2. இசைகொ ளறமு மிருவர் பொருளும்
நசிவில் சுகமு நணுகில்—உசிதத்
திருஞான மாகுந் திகழ்வீர சைவ
வொருமா மலரிங் குவந்து.

3. நாகாரி முன்னு நவில்பாணி தன்னிடையும்
மோசமதில் வந்த முடிவரியும்—யோகமதாம்
நிஷ்டை யிடையு நிருத்த னதிகடையுந்
திட்டமுட னிம்மலராந் தேர்.

## நன்கொடை.

சுக்கிலவரு மாசிமீ 15உ சிவராத்திரியன்று திருத்தலையூரிலிருக்கும் திருவாளர், K. இலிங்கய்யர் அவர்கள் தமது புதல்வி 13-வயதுள்ள வீரம்மணியென்னும் பெண்மணிக்குச்செய்வித்த கிரியாதீக்ஷையின் ஞாபகார்த்தமாக நமது மகாசங்கத்திற்குச் சமர்ப்பித்தனுட்பிவைத்தது ரூ. 1—0—0. அவரது புதல்வியும் குடும்பத்தாரும் சதாசாரமுடையவர்களாய் இலிங்கபக்தியிற் சிறந்து விளங்குவார்களாக

---

## மதிப்புரை.

ஸ்ரீ வீரபத்திரசுவாமி பத்தியமென்னும் தெலுங்குபாஷையில் செய்யப்பெற்ற தோத்திரரூபமான நூலைத் தமிழ் எழுத்தில் வரைந்து அச்சிட்டிருப்பதைக்கண்டு வெளியிடுவித்தோராகிய பவானி. திரு. அ. ஆறுமுகபண்டாரம் அவர்கள் பக்திக்கு மகிழ்கின்றோம்.

விலை அணா 4. அடியிற்கண்ட விலாசத்தாரிடம் பெற்று மகிழ்க.

விலாசம்:— சிவலிங்கவிலாச புத்தகசாலை, அ. வேலாயுதம்.
பிரான்சு, பவானி. ஈரோடு மார்க்கம்.

---

## சந்தா விவரம்.

| | | | |
|---|---|---|---|
| ஆயுட் சந்தா | ரூ. 25–0–0 | மாணவர் சந்தா | ரூ. 1–8–0 |
| ஆண்டுச் சந்தா | ,, 2–0–0 | தனி இதழ் 1-க்கு | ,, 0–4–0 |

---

நித்தியானந்த அச்சுக்கூடம், துறையூர்.